தினத்தந்தி

14 AUG 2025

### திருச்செங்கோடு நகராட்சியில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



திருச்செங்கோடு, ஆக.14-

திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் பல கட்டங்களாக பிரித்து 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக 5-வது கட்டமாக திருச்செங்கோடு நகராட்சியை சேர்ந்த 24, 28, 29 ஆகிய வார்டுகளை சேர்ந்த பொதுமக்களுக்கு அரசின் 13 துறைகளை சேர்ந்த 43 சேவைகள் தொடர்பான மனுக்கள் பெறப்பட்டு 45 நாட்களில் தீர்வு காணும் வகையில் முகாம் நடைபெற்றது. முகாமை திருச்செங்கோடு உதவி கலெக்டர் அங்கித்குமார் ஜெயின், நகராட்சி தலைவர் நளினி ஆகியோர் தொடங்கி வைத்தனர். திருச்செங்கோடு முன்னாள் நகராட்சி தலைவர் நடேசன், தாசில்தார் கிருஷ்ணவேணி, நகராட்சி பொறியாளர் சரவணன், துப்புரவு அலுவலர் சோலை ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் வரி விதிப்பு, பெயர் மாற்றம், மின் இணைப்பு பெயர் மாற்றம், நல வாரிய ஓய்வூதிய பயன் ஆகியவை கேட்டு மனு கொடுத்தவர்களுக்கு உடனடியாக சான்றுகள் வழங்கப்பட்டது. இதில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. வக்கீல் அணி தலைவர் சுரேஷ்பாபு, நகராட்சி கவுன்சிலர்கள், பொதுமக்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

தினகரன்

14 AUG 2025

கொக்கராயன்பேட்டையில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்

**1233 மனுக்கள் குவிந்தது**

பள்ளிபாளையம், ஆக. 14: பள்ளிபாளையம் ஒன்றியம் கொக்கராயன்பேட்டை அரசு பள்ளியில், உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடந்தது. தாசில்தார் சிவக்குமார் தலைமையில் நடந்த முகாமை, முன்னாள் எம்எல்ஏ மூர்த்தி தொடங்கி வைத்து, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் வாங்கி உரிய துறை அதிகாரிகளிடம் வழங்கினார்.



பள்ளிபாளையம் அருகே, கொக்கராயன் பேட்டையில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை முன்னாள் எம்எல்ஏ மூர்த்தி தொடங்கி வைத்தார்.

பட்டா மாறுதல், மகளிர் உரிமைத் தொகை, தொழிலாளர் சலுகைகள், வேளாண்மைத்துறையின் மூலம் கிடைக்க வேண்டிய உரம் மருந்துகள் போன்ற பிரச்னைகளை உரிய விசாரணைக்கு பின்னர் 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படுமென உறுதியளிக்கப்பட்டது. முகாமில் 1233 மனுக்கள் பெறப்பட்டது. இதில் 465 மனுக்கள் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கேட்டு பெண்கள் கொடுத்தனர். நிகழ்ச்சியில் ஒன்றிய திமுக பொறுப்பாளர் இளங்கோவன், முன்னாள் கவுன்சிலர் முருகேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபாகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினகரன் 13 AUG 2025

## திருச்செங்கோடு நகராட்சியில்

# உங்களுடன் ஸ்டாலின் 5ம் கட்ட முகாம்



▶ திருச்செங்கோட்டில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்கள் அளித்த மனுக்களை நகர்மன்ற தலைவர் நளினிசுரேஷ்பாபு ஆய்வு செய்தார்.

திருச்செங்கோடு, ஆக.13: திருச்செங்கோடு நகராட்சியில், உங்களுடன் ஸ்டாலின் 5ம் கட்ட முகாம் நேற்று நடந்தது.

திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் பல கட்டங்களாக பிரித்து உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக 5வது கட்டமாக திருச்செங்கோடு நகராட்சியைச் சேர்ந்த 24,28,29 ஆகிய வார்டுகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கு அரசின் 13 துறைகளைச் சேர்ந்த 43 சேவைகள் தொடர்பான மனுக்கள் பெறப்பட்டு 45 நாட்களில் தீர்வு காணும் வகையில் முகாம் நேற்று நடைபெற்றது. முகாமை திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அங்கித்குமார்

## நகர்மன்ற தலைவர் பங்கேற்பு

ஜெயின், திருச்செங்கோடு நகர்மன்ற தலைவர் நளினி சுரேஷ் பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர். திருச்செங்கோடு மேற்கு நகர திமுக செயலாளர் நடேசன், திருச்செங்கோடு தாசில்தார் கிருஷ்ண வேணி, நகராட்சி பொறியாளர் சரவணன், துப்புரவு அலுவலர் சோலை ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் உடனடி தீர்வு காணப்பட்ட வரி விதிப்பு பெயர் மாற்றம், மின் இணைப்பு பெயர் மாற்றம், நலவாரிய ஓய்வூதிய பயன் ஆகியவை பலருக்கும் செய்து கொடுத்து உடனடியாக சான்றுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக வழக்கறிஞர் அணி தலைவர் சுரேஷ் பாபு, நகர்மன்ற உறுப்பினர்கள் மகேஸ்வரி, புவனேஸ்வரி உலகநாதன், செல்வி ராஜவேல், செல்லம்மாள் தேவராஜன், ராஜா, கொமதேக நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் ராயல் செந்தில், திருச்செங்கோடு வடக்கு நகர செயலாளர் சேன்யோ குமார், மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முகாமில் பட்டா மாறுதல், மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட கோரிக்கை மனுக்களுடன் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.